(6) அறிவிப்புகள்

தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்து, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

THIRU K. T. K. TANGAMANI: I am not speaking on this Bill, Sir. Before we consider the question of various Bills already introduced, I want to know as to how many Bills we are to consider in this session. Just now some half a dozen Bills had been introduced. Probably, tomorrow another half a dozen Bills might be introduced. At this rate how many Bills are we to consider in this session? We were told previously that there are only 14 Bills to cover the Ordinances that have been promulgated and two Joint Select Committee reports. The report of one Joint Select Committee had been just now submitted. Probably, the other report will be submitted in a few days. What I say is we should not be taken by surprise, the House should not be taken by surprise in this manner by introduction of new Bills every day. I want your guidance on this point.

MR. DEPUTY SPEAKER: The Chair is in the same position. We are not in a position to say how many more Bills will be coming. But what I can say is, that every thing will be considered in the Business Advisory Committee and proper time allotted.

3. அரசினர் சட்ட முன் வடிவுகள்

(ஏ) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவை* அறிமுகம் செய்து, மேற்படி சட்ட முன் வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோருகிறேன்.